


துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (9.3.2026) சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய விடுதிகளில் தங்கி பயிற்சி பெற்றுவரும் 2,600 மாணவ, மாணவிகளுக்கு தலா 2,736 ரூபாய் மதிப்பிலான உதவி உபகரணங்கள் அடங்கிய தொகுப்பினை (சாம்பியன்ஸ் கிட்) வழங்கினார். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை முதன்மைச் செயலாளர் சத்யபிரத சாகு, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய பயிற்றுநர்கள், விடுதிகளில் தங்கிப் பயிலும் விளையாட்டு வீரர், வீராங்கனைகள் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (9.3.2026) சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய விடுதிகளில் இந்தாண்டு புதிதாக சேர்க்கப்பட்ட 950 மாணவ, மாணவிகளுக்கு விளையாட்டு அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தை இணைக்கும் வகையில் ஸ்மார்ட் வாட்சுகளை வழங்கினார். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை முதன்மைச் செயலாளர் சத்யபிரத சாகு, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய பயிற்றுநர்கள், விடுதிகளில் தங்கிப் பயிலும் விளையாட்டு வீரர், வீராங்கனைகள் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.


## முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் ‘திராவிட மாடல்’ ஆட்சியில்;
## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலினின் கடும் உழைப்பால்

# இந்தியாவின் விளையாட்டுத் தலைநகரமாக உருவெடுத்துள்ளது தமிழ்நாடு!

**சென்னை, மார்ச் 10**

**முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களும், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களும் இளைஞர்களை ஆக்கபூர்வமான பணிகளில் ஈடுபடுத்திடவும், சிதறிக் கிடக்கும் இளைஞர்களின் ஆற்றல்களைத் திரட்டிடவும், அவர்களை மன உறுதி படைத்தவர்களாகவும், எதிர்கால வாழ்வை நம்பிக்கையோடு எதிர்கொள்பவர்களாகவும் உருவாக்கும் பெரும் பொறுப்பை நிறைவேற்றும் பொருட்டு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் சிறப்பான பணிகளுக்கு ஊக்கமளித்து வருகிறார்கள்.**

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இளைஞர் நலனிலும், விளையாட்டுக் கலை வளர்ச்சியிலும் சிறப்புக் கவனம் செலுத்தி; பல்வேறு புதிய திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்கள். அவற்றின் பயனாக இந்திய அளவில் தமிழ்நாடு அரசின் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பல சாதனைகளை நிகழ்த்தி; இந்தியாவின் விளையாட்டுத் தலைநகரம் சென்னை எனப் புகழ் வளர்த்து வருகிறது. கடந்த ஐந்து ஆண்டுகளில் விளையாட்டு மேம்பாட்டுத்துறை நிகழ்த்தியுள்ள முக்கிய சாதனைகள் மீது ஒரு கண்ணோட்டம்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 2.11.2025 அன்று சென்னை, நுங்கம்பாக்கம் டென்னிஸ் விளையாட்டரங்கில் நடைபெற்ற சென்னை ஓபன் சர்வதேச மகளிர் டென்னிஸ் சாம்பியன் போட்டிகளில் ஒற்றையர் பிரிவில், சாம்பியன் பட்டம் வென்ற இந்தோனேசியாவைச் சேர்ந்த வீராங்கனை ஜானிஸ் ஜென் அவர்களுக்கு கோப்பை மற்றும் பரிசுத்தொகைக்கான காசோலை வழங்கி, பாராட்டினார்.

### திராவிட மாடல் அரசு நடத்திய முக்கிய விளையாட்டுப் போட்டிகள்

- 44வது செஸ் ஒலிம்பியாட் - 2022
- சென்னை ஃபார்முலா 4 கார் பந்தயம் 2024
- சர்வதேச மகளிர் டென்னிஸ் சாம்பியன்ஷிப் போட்டி2022
- ஸ்குவாஷ் உலகக் கோப்பை2023
- ஆசிய ஆடவர் ஹாக்கி சாம்பியன்ஷிப் போட்டி 2023
- கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டி 2023
- சர்வதேச அலை சறுக்குப் போட்டி 2023
- சென்னை ஓபன் சர்வதேச மகளிர் டென்னிஸ் 2025
- முதலமைச்சர் கோப்பை - 2023-2024, 2024-2025, 2025-2026 ஆகிய போட்டிகள் எல்லாம் தொடர்ந்து நடத்தி உலக அளவில் விளையாட்டு ஆர்வலர்களிடையே தமிழ்நாடு ஒரு முக்கிய விளையாட்டு களமாக மதிக்கப்படுகிறது.

### விளையாட்டு வீரர்களை ஊக்குவித்திட அரசு வழங்கும் உதவிகள்

விளையாட்டுப் போட்டிகளில் ஆர்வமுடன் பங்கேற்கும் வீரர்களுக்கு பயிற்சிகள் பெற உதவித் தொகை, தங்கும் இடம் வசதி, போட்டிகளில் பங்கேற்க வெளிஊர்களுக்கும் வெளிநாடுகளுக்கும் சென்று வரும் பயணச் செலவுகள் வெற்றி பெற்ற வீரர் வீராங்கனைகளுக்குப் பரிசுகள், ஊக்கத் தொகைகள் அனைத்தும், போட்டிகளுக்கு ஏற்ப சிறப்பிக்கப்படுகிறார்கள். அவர்களிலும் சிறந்த வெற்றிகளை ஈட்டி தமிழ்நாட்டிற்கும் ஒன்றிய அரசிற்கும் புகழ் தேடித் தரும் வீரர் வீராங்கனைகளுக்கு அரசுத் துறைகளிலும் அரசின், பொதுத்துறை நிறுவனங்களிலும் உயர் ஊதியத்துடன் பணிநியமனங்கள் வழங்கப்படுகின்றன. விளையாட்டில் இருந்து ஓய்வுபெறும் வீரர் வீராங்கனைகளுக்கு ஓய்வூதியங்களும் வழங்கப்படுகின்றன.

### அரசு, அரசு பொதுத்துறை நிறுவனங்களில் பணி நியமனங்கள்

தமிழ்நாட்டிலும் இந்தியாவின் இதர மாநிலங்களிலும், வெளிநாடுகளிலும் விளையாட்டு போட்டிகளில் பங்கேற்றுப் பரிசு பெறும் விளையாட்டு வீரர்களுக்கு அரசு வழங்கும் மூன்று சதவீத இட ஒதுக்கீட்டின்கீழ் ஐந்து ஆண்டுகளில் 70 மாற்றுத் திறனாளி விளையாட்டு வீரர்கள் உள்ளிட்ட 301 விளையாட்டு வீரர்களுக்கு அரசு, பொதுத்துறை நிறுவனங்களில் பணிநியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

### வீரர் வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத்தொகை

சர்வதேச மற்றும் தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர்கள் உட்பட 6689 வீரர் வீராங்கனைகளுக்கு ரூ.215.78 கோடி உயரிய ஊக்கத்தொகை வழங்கிப் பாராட்டப்பட்டுள்ளது.

### உலகத் தரத்தில் விளையாட்டு நகரம்

சென்னை ராஜிவ் காந்தி சாலை என அழைக்கப்படும் பல்வகை விளையாட்டுகளுக்கும் அளித்திடும் பழைய மாமல்லபுரம் சாலையில் அமைந்துள்ள செம்மஞ்சேரியில் ரூ. 261 கோடியில் உலகத் தரத்திலான விளையாட்டு நகரம் அமைக்கப்படுகிறது.

### சிறு விளையாட்டு அரங்கங்கள்

தமிழ்நாட்டில் மொத்தம் 234 தொகுதிகளிலும் ஒரு தொகுதிக்கு ஒரு சிறு விளையாட்டு அரங்கம் அமைக்கப்படும் என அறிவித்து, மொத்தம் 234 சிறு விளையாட்டு அரங்கங்களும் அமைக்க ஆணையிடப்பட்டுள்ளது. அவற்றுள், இதுவரை 141 அரங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. எஞ்சிய அரங்கங் களின் கட்டுமான பணிகள் விரைந்து நடைபெற்று வருகின்றன.

### கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் தொகுப்பு

தமிழ்நாட்டில் வாழும் அனைத்து இளைஞர்களுக்கும் மகளிர்க்கும் அவர்கள் விரும்பும் விளையாட்டுகளில் ஈடுபடுவதற்கு ஏற்பப் பெறுவதற்காக அனைத்துவகை விளையாட்டுகளுக்கும் தேவைப்படும் விளையாட்டுக் கருவிகள், எல்லா ஊர்களிலும் கிடைக்கச் செய்திட வேண்டும் என்பதற்காக, தமிழ்நாட்டில் உள்ள 12,525 கிராம ஊராட்சிகளுக்கும், 12 ,831 நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கும் கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் தொகுப்பு வழங்கப்பட்டுள்ளது.

### தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறமை உள்ள வீரர் வீராங்கனைகளின் தேவைகளை நிறைவு செய்து அவர்களின் கனவுகளுக்குச் சிறகுகள் கொடுக்கும் முனைப்புடன் 8.5.2023 அன்று ஒரு புதிய முயற்சியாக; தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையை தொடங்கி வைத்தார்கள். வீரர் வீராங்கனைகள் சர்வதேசப் போட்டிகளில் பங்கேற்றுப் பதக்கங்களைப் பெற்றுத் தமிழ்நாட்டிற்குப் புகழ் தேடித் தருகின்றனர். அண்மையில் தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளைப் போட்டிகள் சிறப்பாக நடைபெற்றுள்ளமையைப் பாராட்டி இந்திய வர்த்தகம் மற்றும் தொழில் கூட்டமைப்பு தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளைக்குச் சிறந்த அங்கீகாரம் அளித்து இந்தியா ஸ்போர்ட்ஸ் விருது 2025 FICCI வழங்கிப் பாராட்டியது.

### இந்திய தொழில் நிறுவனங்களின் கூட்டமைப்பின் விருது

திராவிட மாடல் அரசு விளையாட்டுத்துறைக்கு அளித்துவரும் அளப்பரிய உதவிகளையும் ஊக்கங்களையும் பாராட்டி போற்றும் வண்ணம் இந்தியத் தொழில் நிறுவனங்கள் கூட்டமைப்பின் சார்பில் விளையாட்டுகளை ஊக்குவித்திடும் சிறந்த மாநிலம் என தமிழ்நாட்டை தேர்வு செய்து 2025-ஆம் ஆண்டிற்கான விருதினை வழங்கிப் பாராட்டியுள்ளது.

### இந்து குழுமத்தின் 2024–ஆம் ஆண்டிற்கான விருது

விளையாட்டுத்துறைக்கு திராவிட மாடல் அரசு வழங்கிவரும் அபரிமிதமான ஊக்கத்தைப் பாராட்டி 2024-ஆம் ஆண்டிற்கான தி இந்து குழுமம் ஸ்போர்ட்ஸ் ஸ்டார் ஏசஸ் 2024 விருது வழங்கிப் பாராட்டியுள்ளது.

### ஒலிம்பிக் அகாடெமிகள்

தமிழ்நாட்டு விளையாட்டு வீரர்களும் வீராங்கனைகளும் ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்றுப் பதக்கங்கள் பெறுவதை ஊக்குவிப்பதற்காக ஒலிம்பிக் தங்கம் தேடல் என்னும் திட்டத்தைத் திராவிட மாடல் அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. மேலும், ஒலிம்பிக் போட்டிகளுக்கு முறையான பயிற்சிகள் அளித்திடும் நோக்கில் சென்னை, திருச்சி, மதுரை நீலகிரி ஆகிய மாவட்டங்களில் ஒலிம்பிக் அகாடெமிகளை திராவிட மாடல் அரசு நிறுவியுள்ளது.

### சர்வதேசத் தரத்தில் விளையாட்டுக் களங்கள்

தமிழ்நாட்டைச் சேர்ந்த வீரர்களும் வீராங்கனைகளும் சிறந்த முறையில் பயிற்சிகளைப் பெற வேண்டும் என்பதற்காக தமிழ்நாட்டில் உள்ள அனைத்து விளையாட்டு அரங்கங்களிலும் சர்வதேசத் தரத்தில் செயற்கை ஓடுபாதைகள், விளையாட்டு அரங்கங்கள், நீச்சல் குளங்கள், மாவட்ட விளையாட்டு வளாகங்கள், சிறு விளையாட்டு அரங்குகள், தங்கும் விடுதிகள், பயிற்சி மையங்கள் ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன.

### 40 சர்வதேச, தேசிய அளவிலான விளையாட்டு போட்டிகள்

வேறு எந்த மாநிலத்திலும் நடைபெறாத வகையில் கடந்த 5 ஆண்டுகளில் மட்டும் திராவிட மாடல் அரசின் முனைப்பால் 40 சர்வதேச மற்றும் தேசிய அளவிலான சர்வதேசப் போட்டிகள் நம் தமிழ்நாட்டில்தான் நடைபெற்றுள்ளன என்பது தமிழ்நாட்டின் விளையாட்டுத்துறை வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கத்தக்க சாதனையாகும்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவரக்ளும், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களும் தமிழ்நாட்டின் விளையாட்டுத் துறையை இந்திய அளவில் மட்டும் அல்லாமல் உலக அளவிலும் புகழ்க் கொடி நாட்டும் வகையில் சிறப்பாக வளர்த்தெடுத்து வருவதால் இந்தியாவின் விளையாட்டுத் தலைநகரம் தமிழ்நாடு என இன்று பெற்றுள்ள புகழ் நாளை, உலகின் விளையாட்டுத் தலைநகரம் தமிழ்நாடு என்னும் பெருமையையும் புகழையும் ஈட்டும் என்பது உறுதி உறுதி!

# தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டிய நிலுவைத் தொகை - நாடாளுமன்றத்தில் ஒன்றிய அரசு அலட்சிய பதில்!

## மாநிலத்தின் வளர்ச்சியை திட்டமிட்டு முடக்க சதி கே.இ.பிரகாஷ் எம்.பி. குற்றச்சாட்டு!

*புதுடெல்லி, மார்ச்.10-*

*தமிழ்நாட்டின் வரிப்பணத்தில் பெரும்பகுதியை எடுத்துக் கொள்ளும் ஒன்றிய அரசு, அதற்குரிய நிதிப் பங்கீட்டை முறையாக வழங்காமல் தொடர்ந்து வஞ்சகமாக செயல்பட்டு வருகிறது. இந்த நிலையில், தமிழ்நாட்டிற்கு எந்தெந்த திட்டங்களுக்கு எவ்வளவு நிதி இது வரை ஒதுக்கப்பட்டுள்ளது, நிலுவையில் உள்ள தொகை எப்போது வழங்கப்படும் என்று, நாடாளுமன்றத்தில் நிதியமைச்சகத்திடம் ஈரோடு கே.இ.பிரகாஷ் கேள்வி எழுப்பினார்.*



*எப்போதும் போல, புள்ளி விவரங்களை முறையாக அளிக்காமலும், நிலுவைத்தொகை பற்றி மூச்சுக்கூட விடாமலும் ஒன்றிய அரசு தவிர்த்துள்ளது. உரிய நிதிப்பங்கீடு இல்லாமல், தமிழ்நாட்டு மக்களுக்கான பல திட்டங்களைதன்னுடைய நிதியில் இருந்து மாநில அரசு மேற்கொண்டு வரும் சூழலில் இப்படியொரு பதில் அதிர்ச்சியளிக்கிறது.*

**1. ‘சமக்ர சிக் ஷா’ திட்டத்திற்கு உரிய நிதி வழங்காமல் வஞ்சனை:**

*‘சமக்ர சிக் ஷா’ திட்டத்தில், 2025 - 2026ம் ஆண்டுக்கான நிதியாக, மார்ச் 5 வரை 538.39 கோடி ரூபாய் விடுவித்துள்ளதாக ஒன்றிய அரசு கூறியுள்ளது. ஆனால், கடந்த ஆண்டுகளில் வழங்க வேண்டிய நிறுத்தி வைக்கப்பட்ட நிலுவைத் தொகை பற்றி எந்த சமிக்ஞையும் பதிலில் இல்லை.*

*தமிழ்நாடு அரசின் கோரிக்கை, இந்த ஆண்டுக்கு வர வேண்டிய நிதி மட்டுமல்ல, ஏற்கனவே நிலுவையில் உள்ள தொகையை வழங்க வேண்டும் என்பதும் தான். ஆனால், அதைப்பற்றி எதுவும் சொல்லாதது, தமிழ்நாட்டின் கல்வி வளர்ச்சியை சிதைக்கும் தேசிய கல்விக் கொள்கையை ஏற்காததற்கான பழிவாங்கும் செயல் என்றேபார்க்க வேண்டியிருக்கிறது.*

**2. ‘ஜல் ஜீவன்’ திட்டத்தில் நிதி கொடுக்காமல் முடங்கும் குடிநீர் திட்டங்கள்:**

*‘ஜல் ஜீவன்’ திட்டத்திற்கு ஒன்றிய அரசிடம் இருந்து, 3000 கோடி ரூபாய்க்கும் மேல் நிலுவைத் தொகை வர வேண்டும். ஆனால், இதுபற்றி ஒன்றிய அரசு பதிலில் எதுவும் குறிப்பிடவில்லை.*

*இப்படி நிலுவைத் தொகை வராததால், தமிழ்நாட்டில் ஜல் ஜீவன் திட்டத்தின் கீழ் மொத்தம் 18 குடிநீர் திட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக, நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு அவர்கள் கூறியுள்ளார். இப்படி தமிழ்நாடு கடுமையாக பாதிக்கப்பட்டும் ஒன்றிய அரசு நிலுவைத் தொகையைப் பற்றி பேசாதது ஏற்க முடியாத ஒன்று.*

**3. IGST நிலுவைத்தொகைமற்றும் கடன் வாங்கும் உச்சவரம்பில் தொடரும் சதி:**

*IGST நிலுவைத் தொகை மற்றும் மாநிலத்தின் கடன் வாங்கும் உச்சவரம்பில் ஒன்றிய அரசு மேற்கொண்டு வரும் எதேச்சதிகாரச் செயல்களுக்கும், சமாதானமான பதில்கள் கிடைக்கவில்லை.*

*IGST நிலுவைத் தொகையை மாநிலங்களின் ஒப்புதலின்றி, தன்னிச்சையாகக் கையாள்வதை ஒன்றிய அரசேஒப்புக் கொண்டுள்ளது. மார்ச் மாதத்தில் வழங்க வேண்டிய வரிப் பகிர்வைஎவ்வித முகாந்திரமுமின்றி ஏப்ரல் மாதத்திற்குத் தள்ளி வைத்துள்ளதை உறுதிப் படுத்தியுள்ளது. இது, மாநில அரசின் அன்றாட பணப்புழக்கத்தை (Cash Flow) வேண்டுமென்றே சீர்குலைக்கும் செயல்.*

*மேலும், மாநிலத்தின் கடன் வாங்கும் உச்சவரம்பில் (Net Borrowing Ceiling) நிபந்தனைகளை திணிப்பதையும் ஒன்றிய அரசு ஒப்புக் கொண்டுள்ளது. இதற்கு என்ன காரணங்களை ஒன்றிய அரசு சமாளிப்பாக கூறினாலும், அதைத் துளியும் ஏற்க முடியாது. நிபந்தனைகளை நிறைவேற்றினால் மட்டுமே ஒரு மாநில அரசு தனது வளர்ச்சிக்காக கடன் வாங்க முடியும் என்பது, அரசியலமைப்பு வழங்கியுள்ள மாநில உரிமைகளின் மீதும் கூட்டாட்சித் தத்துவத்தின் மீதும் நடத்தப்படும் போரே.*

*‘திராவிட மாடல்’ ஆட்சியில் அனைத்துத் துறைகளிலும் தமிழ்நாடு வளர்ச்சி பெற்று வருவதைப் பொறுக்க முடியாமல், செயற்கையான நிதி நெருக்கடிகளை ஏற்படுத்துவதை ஒன்றிய அரசு உடனடியாக நிறுத்த வேண்டும்.*

*இந்தியாவின் கூட்டாட்சிக்கும், தமிழ்நாட்டிற்கும் எதிரான ஒன்றிய அரசின் மேலாதிக்கங்களை எதிர்த்து, எமது குரல் தொடர்ந்து எழும்!*

*இவ்வாற கே.இ.பிரகாஷ் எம்.பி. தெரிவித்துள்ளார்.*

## கோவையில் இன்று காணொலி மூலம்

# ஜி.டி. நாயுடு சிலை: முதல்வர் திறக்கிறார்!

**கோவை, மார்ச்.10-**

**கோயம்புத்தூர் மாவட்டம், வ.உ.சி மைதானத்தில் ரூ.50இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள அறிவியல் விஞ்ஞானி ஜி.டி நாயுடு அவர்களின் திருவுருவச் சிலையைக் காணொலிக் காட்சி வாயிலாக முதல்வர் திறந்து வைக்கிறார்.**

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் மானியக் கோரிக்கையின்போது, தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், ”தமிழ்நாடு தந்த அறிவியல் மாமேதைகளில் ஒருவரும், இயந்திரவியல் மற்றும் விவசாயம் சார்ந்த ஆராய்ச்சிகளை மேற்கொண்டு பல்வேறு அரிய கண்டுபிடிப்புகளை உருவாக்கியவரும், கல்வியாளராகவும், எளியோருக்கு உதவும் நற்குணம் வாய்ந்தவராகவும் விளங்கிய ஜி.டி நாயுடு அவர்களுக்கு கோயம்புத்தூரில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் திருவுருவச் சிலை நிறுவப்படும்” என்று அறிவித்தார்கள். அதன்படி, கோயம்புத்தூர் மாவட்டத்தில் வ.உ.சி மைதானத்தில் ஜி.டி நாயுடு அவர்களுக்கு சிலை அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, பணிகள் முடிவடைந்துள்ளது.

இதனைத்தொடர்ந்து, இன்று (10.03.2026) காலை 10 மணிக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில், வ.உ.சி மைதானத்தில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள அறிவியல் விஞ்ஞானி ஜி.டி.நாயுடு அவர்களின் திருவுருவச் சிலையைக் காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைக்கவுள்ளார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி மேயர், மாநகர காவல் ஆணையர், மாநகராட்சி ஆணையாளர், மாநகராட்சி துணை மேயர், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் மற்றும் மாமன்ற பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.